செய்தி வெளியீடு எண் : 741 நாள்: 10.05.2022

# இந்திய–ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா ஒப்பந்தங்கள் குறித்து தொழில் நிறுவனங்களுடன் கலந்துரையாடல் கூட்டத்தில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் ஆற்றிய உரை

"இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE) ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தமும், இந்தியா–ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனை தமிழகத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ளவும், ஒப்பந்தம் தொடர்பான விழிப்புணர்வை பெறவும், இந்நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

இந்தியா–ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையிலான சீபா ஒப்பந்தத்தின்படி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டிற்கு நமது மொத்த ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் 90 சதவீத பொருட்களுக்கு உடனடியாக வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இந்தியா–ஆஸ்திரேலியா இடையிலான E.C.T.A ஒப்பந்தமானது, இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு ஏற்றுமதி செய்யும் 98 சதவீத பொருள்களுக்கு ஜிரோ சதவீத வரி விதிப்பு உடனடியாக அமலுக்கு வருகிறது. இந்த ஒப்பந்தம், இந்தியாவில் உள்ள MSME நிறுவனங்களின் செயல்பாடுகளுக்கு உத்வேகத்தை அளிக்கவும், மற்ற நாட்டு நிறுவனங்களுடன் போட்டியிடும் தன்மையை அதிகரிக்கவும் பெரிதும் உதவும். மேலும், MSME நிறுவனங்களின் பொருளாதார மற்றும் வர்த்தகப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில், இந்தியா–ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே ஆன சீபா (CEPA) ஒப்பந்தத்தில் ஒரு தனி அத்தியாயம் இணைக்கப்பட்டுள்ளது மிக சிறந்த அம்சமாகும்.

மேலும், MSME நிறுவனங்கள் பயன் அடையும் வகையில் இரு நாட்டின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான குழு அமைக்கப்பட்டுள்ளதும் மிகச் சிறந்த வரவேற்பை பெற்றுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு பம்புகள், மசாலா பொருட்கள், முத்துக்கள், ஆபரணங்கள், பொறியியல் பொருட்கள், காகிதம், காகித அட்டைப் பொருட்கள் வாகனங்கள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு தமிழ்நாட்டிலிருந்து

U.A.E–க்கு 2021–22 ஆம் ஆண்டில் ரூபாய் 11 ஆயிரம் கோடி மதிப்புடைய பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று தமிழ்நாட்டிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு ஜவுளி–ஆயத்த ஆடைகள், தோல்–காலணி, மரச்சாமான்கள், இயந்திரங்கள், மின்சாதன பொருட்கள், தானியங்கி வாகனங்கள், வாகன உதிரிபாகங்கள், தென்னை நார் போன்ற பொருட்கள், ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு தமிழ்நாட்டிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு 2021–22 ஆம் ஆண்டில் ரூபாய் 2 ஆயிரத்து 700 கோடி மதிப்புடைய பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

உதாரணமாக இந்தியாவிலிருந்து U.A.E.–க்கு ஏற்றுமதியாகும் பின்னலாடைகளில் 50 சதவீதம் திருப்பூரிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. U.A.E. மற்றும் வளைகுடா பகுதிகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன், தமிழ்நாட்டு உற்பத்தியாளர்கள் போட்டியிட சீபா (CEPA) ஒப்பந்தம் பெரிதும் உதவும். அதுமட்டும் அல்லாமல், மதுரை மல்லி, பட்டன் ரோஸ், லில்லி, சாமந்தி போன்ற புவிசார் குறியீடு பெற்றுள்ள பாரம்பரிய மலர்கள் தமிழ்நாட்டிலிருந்து துபாய்க்கு ஏற்றுமதி செய்வதற்கு அதிகவாய்ப்புகள் உள்ளது. தமிழ்நாட்டின் பாரம்பரிய தொழில்களான ஜவுளி, ஆட்டோமொபைல் நிறுவனங்களுடன், மின்னணுவியல், பாதுகாப்பு, ஏரோ ஸ்பேஸ், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றிலும் நம் நிறுவனங்கள் முன்னணியில் உள்ளன.

நடப்பு ஆண்டில், MSME துறைகளில் குறிப்பாக வளர்ந்து வரும் துறைகளான மின்சார வாகனங்கள், மின்சார வாகன பேட்டரி, விண்வெளி, மருந்து, பெட்ரோ கெமிக்கல்ஸ் போன்றவற்றிலும் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள MSME நிறுவனங்கள் நம் நாட்டின் ஏற்றுமதியில் 45 சதவீதத்திற்கு அதிகமான பங்களிப்பை வழங்குகின்றன. இதனை மேலும் ஊக்குவிக்கும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாட்டில் திருப்பூர், கரூர், மதுரை, ஆம்பூர், தூத்துக்குடி, பொள்ளாச்சி, காஞ்சிபுரம், சென்னை, கோயம்புத்தூர், ஓசூர் ஆகிய இடங்களில் 10 ஏற்றுமதி மையங்கள் மேம்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை செயல்படுத்தும் விதமாக வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகத்தின் மூலம், மாவட்டத் தொழில் மைய உதவிப் பொறியாளர்களுக்கு ஏற்றுமதி சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. MSME நிறுவனங்கங்கள் மீது எப்போதும் தனி கவனம் செலுத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் "குறு,

சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ஏற்றுமதி கையேடு" ஒன்றினையும் வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு சிட்கோ மூலம் வளர்ந்து வரும் தொழில் துறைகளான மருந்து, துல்லியமான உற்பத்தி, பாதுகாப்பு, விண்வெளி, ஸ்மார்ட் போக்குவரத்து ஆகிய துறைகளுக்கான பெருங்குழுமங்கள் – Mega Clusters தலா ரூபாய் 100 கோடி மதிப்பில் பொது வசதி மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், புகைப்படம், அட்டைப்பெட்டி அச்சிடுதல், உணவுப் பொருட்கள், கயிறு தயாரித்தல் அச்சுத் தொழில்களுக்கு ரூபாய் 55 கோடி செலவில் 5 பொது வசதி மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நமது பாரம்பரிய தொழில்களில் ஒன்றான தென்னைநார் கயிறு உற்பத்தி மற்றும் அதன் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்க, கோயம்புத்தூரில் ரூ. 5 கோடி செலவில் தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் கழக அரசு பொறுப்பேற்றகுறுகிய காலத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி MSME நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ரூபாய் 240 கோடி முதலீட்டில் 2 ஆயிரத்து 545 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் 10 ஏற்றுமதி சார்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இந்நிறுவனங்களின் தொழிற்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டின் ஏற்றுமதியை 2030 ஆம் ஆண்டிற்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இலக்கினை அடைய அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்ற உறுதியினை அளித்து, நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டு தமிழகத்தை தொழில் வளர்ச்சியிலும், ஏற்றுமதியிலும் முதலிடத்திற்கு கொண்டுவர உறுதி ஏற்போம்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in